**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 16/2025**
**வழக்கு சாட்சி PW-9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | Dr.நம்பிராஜன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சுப்பிரமணியன் | தொழில் | : | மருத்துவர் |
| கிராமம் | : | திருநெல்வேலி | வயது | : | 43 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of November 20th, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பொது அறுவை சிகிச்சை பிரிவில் உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். கடந்த 30.03.2022 ம் தேதி அன்று இரவு 10.45 மணியளவில் தென்காசி மாவட்டம் கடையநல்லூர், கம்பனேரி, பசும்பொன் தெருவைச் சேர்ந்த செல்லத்துரை என்பவரது மகன் ரவி, வயது 45 என்பவர் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டார். அவரை அன்றைய தேதியில் பணியில் இருந்த மருத்துவர் திரு.சுரேஷ்குமார் என்பவர் பரிசோதனை செய்தார்.

அவருக்கு மேல்வயிற்றில் 1 செமீ அளவில் தையலிடப்பட்ட காயம் இருந்தது. வயிற்றின் இடது பக்கத்தில் இரத்தக்கட்டு காணப்பட்டது. அவருக்கு அன்றே சீ.டீ.ஸ்கேன் பரிசோதனை செய்யப்பட்டது. அன்று பணியில் இருந்து நுண்கதிர் மருத்துவர் பிரவீன் அவருடைய வயிற்றினுள்

இரத்தக்கசிவு இருப்பதாகவும், இடது பக்க வயிற்றின் தசைப்பகுதியில் இரத்தக்கட்டு இருப்பதாகவும் கருத்துரை வழங்கினார். நோயாளியின் அவசரநிலையை கருத்திற்கொண்டு அவசர அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அறுவை சிகிச்சையின் போது, வயிற்றினுள் 500 மிலி அளவில் இரத்தக்கசிவும், இணைச்சவ்வில் 4 x 3 செமீ அளவில் இரத்தக்கட்டும் இருந்தது. இரத்தக்கசிவு அகற்றப்பட்டு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. 12.04.2022 ம் தேதியன்று நோயாளி அவரது சொந்த விருப்பத்தின் பேரில் சிகிச்சையிலிருந்து விடுவிக்கப்பட்டார். அவருக்கு நான் வழங்கிய சிகிச்சை விபரச்சான்று **அ.சா.ஆ.9** ஆகும்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**</u>

போலீசார் என்னை இந்த வழக்கில் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சிகிச்சை விபரங்களை போலீசாரிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் அவருக்கு மருத்துவ சிகிச்சை கொடுத்துள்ளேனா? என்றால் மேற்பார்வை பார்த்துள்ளேன். மருந்து, மாத்திரைகள் பரிந்துரை செய்துள்ளேன். அறுவை சிகிச்சை செய்யவில்லை. பொதுவாக 0.5 x 0.5 செமீ அளவிலான காயம் மேலோட்டமான காயம் என்றால் தையல் போடப்பட்டு தான் மேல்சிகிச்சைக்காக அனுப்பப்பட்டிருந்தார். தோலின் கனம் 1 செமீ அல்லது 2 செமீ அளவு தான் இருக்கும் என்றால் சரிதான். நான் காயத்தின் தன்மை குறித்து கருத்துரு வழங்கவில்லை என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

சாட்சி திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Tr.M.Sivamurugan, Junior Assistant, திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் எதிரி முன்னிலையில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.11.21 18:51:06 +0530